IJCRT.ORG ISSN : 2320-2882

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)

An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# திருக்குறளில் வள்ளுவரின் இறைநெறி கோட்பாட்டுக் கொள்கை

## Valluvar's Theological Principles in Thirukkural

**முனைவர் க.விஜயராகவன்**

**தலைவர் - தமிழ்த்துறை, சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேலம்-5, தமிழ்நாடு, இந்தியா. பெரியார் பல்கலைக்கழகம் இணைவுப்பெற்றது, சேலம், தமிழ்நாடு, இந்தியா.**

**Dr. G. VIJAYARAGAVAN**

**Head - Assistant Professor in Tamil, SONA College of Arts and Science, Salem-5, Tamil Nadu, India. Affliated to Periyar University, Salem, Tamil Nadu, India.**

**ORCiD :** https://orcid.org/0009-0002-9262-2204

**Abstract**

References to God in literature are centred on the five-dimensional systems and the lives of the people living in them. Worship and belief in small gods and great gods have spread throughout the minds of the people. God is mentioned in many sayings. It has been defined as Lord, Lord, Chief, etc. and has been mentioned in literature. When fear and hope prevail, and when need and suffering are overcome, there is a possibility that a person is needed for sharing, and later it has been transformed into the position of God. In this context, this research field aims to study how the word form of God used in literature has been defined as a principle of theology by Valluvar in the Thirukkural and explain the ideas related to it.

**Keywords**

Valluvar, God, virtue, justice literature, Aimpula theory, Engunathan

**ஆய்வுச்சுருக்கம்**

இலக்கியங்களில் கடவுள் குறித்த குறிப்புகள் ஐந்நில அமைப்புகளும் அது சார்ந்த மக்களின் வாழ்வியலையும் மையாமாக் கொண்டு விளங்குகிறது. சிறு தெய்வம், பெருந்தெய்வம் என வழிப்பாடும் நம்பிக்கையும் மக்களின் எண்ணங்களுக்குள் விரிந்து இருந்துள்ளது. கடவுள் என்பது பல சொல்லாடல்களில் குறிக்கப்பட்டுள்ளது. இறைவன், தலைவன், முதல்வன் என்றெல்லாம் வரையறை செய்யப்பட்டு இலக்கியங்களில் குறிக்கப்பட்டுள்ளது. பயமும், நம்பிக்கையும் மேலிடும்போதும், தேவை, துன்பம் என கடக்க நினைக்கும்போதும் ஓரிடம், பகிர்தலுக்காக ஓர் நபர் தேவையாக இருந்து பின்நாளில் அது கடவுள் எனும் நிலைப்பாடாக உருமாறியிருக்கிறது என்றும் கருத வாய்ப்புகள் இருந்து வருகிறது. இந்நிலையில் இலக்கியங்களில் கையாளப்படும் இறை எனும் சொல் வடிவம் திருக்குறளில் எவ்வாறு வள்ளுவரால் இறைநெறிக் கோட்பாடாக வரையறை செய்யப்பட்டுள்ளது என்பதை ஆய்ந்து அதுசார்ந்த கருத்துக்களை விளக்கியுரைப்பதாக இவ்வாய்வுக் களம் அமைகிறது.

**திறவுச்சொற்கள்**

வள்ளுவர், இறை, அறம், நீதி இலக்கியங்கள், ஐம்புலக்கோட்பாடு, எண்குணத்தான்

**முன்னுரை**

உலக உயிர்களின் தோற்றத்திற்கான காரணம் இதுவரை அறியப்படாத ஒன்று. எவ்வாறு உயிர்கள் தோன்றியிருக்கும். எப்போது தோன்றியிருக்கும். எங்கே தோன்றியிருக்கும் என்பதெல்லாம் இன்றும் யூகங்களின் பதிப்பீடுகளாக மட்டும் இருந்து வருகிறது. அவ்வாறு இருக்கையில் பொதுவான நம்பிக்கையாக உலக உயிர்களின் படைப்பு இறைவனால் நிகழ்த்தப்படுவது என்கிறது நமது பண்பாடு சார்ந்த மரபியல் கூறுகள். பயம், அறியாமை, தேவை, என்று ஒருவிதமான சூழ்நிலை கடவுள் சாந்த நம்பிக்கைகளை ஊக்குவித்தும், மனித இனத்திற்கான வழிகாட்டும் நெறியாகவும் அமைவதற்கு வழிவகுத்திருக்கிறது.

திருக்குறள் சாதி, சமயம், இனம், மொழி என அனைத்தையும் கடந்து காலத்தை வென்று நிற்கும் நூல். அணைத்து சமயத்தினரும் மறைநூல் என மதித்துப் போற்றும் அறநூல். அனைவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய இறைக் கோட்பாடுகளைக் பகுத்தறிவுடன் விளக்கி பெரும்பயன் தரும் சிறந்த நூல்.

**"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே உலகு"** **குறள். எண். 1**

எழுத்துக்கள் எல்லாம் அகரத்தை முதலாக உடையன. அது போல உலகம் கடவுளை முதன்மை உடையது. அகரம் எழுத்துகள் எல்லாவற்றிற்கும் தொடக்கம். அகரமின்றி ஒலி பிறக்காது. பிறவொலி பிறப்பதற்கு அகரம் துணையாகின்றது. அகரம் ஒவ்வோர் எழுத்திற்கும் உடன் துணையாக நின்று உதவுவது. எல்லாப் பேச்சு ஒலிகளுக்கும் அகரம், முதலும், துணையும், முடிவும் ஆக நிற்பது. அதுபோல, வையகமும் எல்லா உலகங்களும் நிறைந்த வானகமும் இறைவனடியாகத் தோன்றி, இறைவன் துணையால் காக்கப் பெற்று, இறைவனால் ஒடுங்கும் என்ற உண்மையையும் இவ்வுவமையால் அறிய முடிகின்றது. இறைவனே மூலமும், முதலுமாய் இருக்கின்றான் என்ற உண்மையை அறிவியல் கண்ணோட்டத்தோடு அகரம் என்ற உவமையால் அழகுற எடுத்துக்காட்டுகின்றார் வள்ளுவர். எழுத்துக்கெல்லாம் அகரமே முதலாகும். அதுபோல, உலகனைத்துக்கும், ஐம்பூதங்களுக்கும் முதலாகும் ஆதி பகவன் தனக்குத் தானே முதலாகும்.

**நீதி இலக்கியங்களில் இறை எனும் சொல்**

திருக்குறள் நீதி இலக்கியங்களில் ஒன்று. எழுதப்பட்டக் காலமும் தொகுக்கப்பட்ட காலமும் வேறுபட்டாலும் கருத்துகளில் மாற்றம் இல்லாமல் கிடைத்த நூலாக திருக்குறள் இருக்கிறது. முழுக்க அறக்கருத்துக்களை போதிக்கும் நூலாக விளங்குகிறது. இந்த ஆய்வு திருக்குறளில் இறைநெறிக் கோட்பாடுகள் என வரையறை செய்துக் கொண்டுள்ளதால் திருக்குறள் போல பிற நீதி இலக்கியங்களிலும் இறை எனும் சொல் பயன்பாடு எப்படி பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது ஆய்ந்து நோக்கத்தக்கது ஆய்வை வலுப்படுத்தும். எனவே, இறை எனும் சொல் பயன்பாடு குறித்து கீழ்வரும் வகையில் விளக்கப்பட்டுள்ளது.

**அருங்கலச்செப்பு - சமண முனிவர்**

| | |
|---|---|
| “புற்ற உரைத்தான் இறை” | அருங்.. பா. 5 |
| “கசிவினோடு இல்லான் இறை” | அருங். பா. 6 |
| “உடையான் உலகுக்கு இறை” | அருங். பா. 7 |
| “உரைத்தான் இறைவன் அறம்” | அருங். பா. 8 |
| "என்றும்உண் டாகி இறையால் வெளிப்பட்டு” | அருங். பா. 9 |
| “இறைவன் என உணரல் பாற்று” | அருங். பா. 37 |
| “இழிகுலத்து என்றும் பிறவார் இறைவன்” | அருங். பா. 50 |

**அறநெறிச்சாரம் - முனைப்பாடியார்**

“இனத்துள் இறைமையும் செய்து மனக்கினிய” அறநெறி. பா. 13

“இறைவனாச் செய்வானும் தானேதான் தன்னைச்” அறநெறி. பா. 77

“இறையிறையின் சந்தித்தென்பொடூஉன் சார்த்தி” அறநெறி. பா. 112

**நன்னெறி - சிவப்பிரகாச சுவாமிகள்**

“நெல்லுக்கு இறைப்பதே நீரன்றிக் காட்டுமுளி
புல்லுக்கு இறைப்பாரோ போய்” நன்னெறி. பா. 36

**நீதி வெண்பா, விவேக சிந்தாமணி**

“முற்றும் இறைசெயலே முற்றிடினும் தன்னருளைப்” நீதி வெண்பா. பா. 40

“இந்திர பதங்கள் குன்றும் இறையவர் பதங்கள் மாறும்” விவேக. பா. 125

“என் அனைக் கன்று முத்தனைக் குனிக்கும்
இறையனை அனைக்குமே அன்று” விவேக. பா. 126

**வெற்றி வேற்கை (நறுந்தொகை) - அதிவீரராம பாண்டியர்**

“எழுத்து அறிவித்தவன் இறைவன் ஆகும்” வெற்றி வேற்கை. பா. 1

குடி அலைத்து இரந்து வெங்கோலோடு நின்ற
முடியுடை இறைவனாம் மூர்க்கனும் பதரே” வெற்றி வேற்கை.பா. 66

**அறநெறிச்சாரம் - முனைப்பாடியார்**

“தாவின்றி எப்பொருளும் கண்டுணர்ந்து தாமரைப்
பூவின்மேல் சென்றான் புகழடியை நாவின்
துதித்து ஈண்டற நெறிச் சாரத்தைத் தோன்ற
விரிப்பன் சுருக்காய் விரைந்து” அறநெறி. பா. 1

**இரங்கேச வெண்பா ( நீதி சூடாமணி) - பிறசை சாந்தக் கவிராயர் )**

“ஒன்றி மறித்தான் உரோணிசக டைச்சௌரி
என்றும் புகாமல் இரங்கேசா நன்று
முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு” இரங்கேச வெண்பா. பா. 39

**சோமேசர் முதுமொழி வெண்பா - சிவஞான முனிவர்**

"பார்சீதை சீலம் பழித்துரைத்துங் காகுத்தன்
சோர்வுறமுன் சீறிலனே சோமேசா தேரிற்
செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ் தங்கு முலகு" சோமேசர் முதுமொழி வெண்பா. பா. 39

**முதுமொழிமேல் வைப்பு – கமலை வெள்ளியம்பலவாண முனிவர்**

"மதுரை மதுரையென்பார் மாந்தர் அதுவன்றோ
காட்சிக் கெளியன் கடுஞ்சொல்ல னல்லனேல்
மீக்கூறு மன்ன னிலம்" முதுமொழிமேல் வைப்பு. பா.64

போன்ற நீதி இலக்கியங்கள் 'இறை' எனும் சொல்லை குறிப்பிடுகின்றன. எனினும் எல்லா இடங்களிலும் இறை எனும் சொல் கடவுள் அல்லது இறைவன் எனும் நிலைப்பாட்டில் வருவதில்லை. மேலும் இறை எனும் சொல்லின் பயன்பாடு இறைவன், தலைவன், முதன்மையானவன், துணையாக இருப்பவன் எனும் பொருண்மைகளில் வழக்கில் இருந்துள்ளதும் அறிய முடிகிறது.

**வாழ்வியலும் இறை உணர்வும்**

ஏழை, எளியவர், துன்பமும், துயரும் உடையவர் மட்டுமன்றி, ஆற்றலும், பெருமையும் மிக்க அரசர், துறவியர், பெருஞ்செல்வர், அறிஞர்கள், ஞானிகள், விஞ்ஞானிகள், வலிமை மிக்கவர் என அனைவரும் தங்கள் நிலையிலிருந்து தாழாது வாழவும், மேலும் உயரவும், எதிர்பாராத விபத்து, ஆபத்துக்கள், மனத்தில் தோன்றும் அச்சங்கள் இவைகளிலிருந்து தங்களைக் காத்துக் கொள்ளவும், எல்லா மனக்கவலைகளை மாற்றிடவும் இறைவன் துணையை விரும்புகின்றனர். கடவுளை மறுப்பவர்களும் உயிரச்சம் ஏற்படும்போதும், பதவியிழக்க நேரிடும்போதும் தங்களைக் காத்துக் கொள்ளப் பெரும் நம்பிக்கையோடு இறைவனைப் பற்றிக் கொள்கின்றனர்.

நம்பிக்கை இல்லாதவரும், காலம் மாறும் போது, துன்பங்கள், துயரங்கள் அடுக்கடுக்காய் நேரிடும்போது, நோய்களால் பாதிக்கப்படும்போது, தாழ்வு நேரும்போது, நண்பர்களால், உறவினர்களால் கைவிடப்படும்போது, தனக்கு நிகரில்லாதவன் தாளைப் பற்றிக் கொள்கின்றார்கள். அறிவின் துணை மட்டும் கொண்டு நாத்திகம் பேசுகின்றவர்களும், துன்பங்கள் பேரிடியாகத் தாக்கிப் பேரிடர் ஏற்படும் போது, இதயத்தால் உணர்ந்து உண்மை அனுபவத்தால் தெளிவுபெற்றுத் தங்கள் சிற்றறிவுக்கு அப்பாற்பட்ட வாலறிவனின் அற்புத ஆற்றலை உணர்ந்து

மாற்றம் பெறுகின்றார்கள். மனக்கவலையை மாற்ற வல்லவன் எல்லா வல்லமையும் நிறைந்த இறைவனே என்று உணர்கின்றனர். இயற்கையின் பேராற்றலை உணர்கின்றனர்.

**“தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்**
**மனக்கவலை மாற்றல் அரிது” குறள். எண். 7**

கடவுள் அனைவரின் உள்ளத்திலும் நிறைந்திருக்கின்றான். தூயவர் உள்ளத்தில் மாட்சியுடன் ஆட்சி செய்கின்றான். இறைவன் என்றால் எங்கும், எதிலும் நிறைந்து தங்கியிருப்பவன் என்று பொருள். கடவுள் எல்லா எல்லைகளையும் கடந்து நிற்பவன். எங்கும் நிறைந்தும், எல்லா உயிர்களிலும் பொருள்களிலும் நீக்கமறத் தங்கியிருக்கும் இறைவன் பெரும் கொடையாளன். பேரருள் மிக்கவன்.

**“வேண்டதக்கது அறியோய் நீ !**
**வேண்ட முழுதும் தருவோய் நீ!**
**வேண்டும் அயன்மாற்கு அரியோய் நீ!**
**வேண்டி என்னைப் பணி கொண்டாய்!**
**வேண்டி நீ யாது அருள்செய்தாய் யானும்**
**அதுவே வேண்டின் அல்லால்**
**வேண்டும் பரிசொன்று உண்டென்னில்,**
**அதுவும் உந்தன் விருப்பன்றே!” திருவாசகம், குழைத். பத்து**

என்று திருவாசகம் குறிப்பிடுவதுபோல, வேண்டத்தக்கது அறிந்து வேண்டுவன எல்லாம் நல்குபவன்; வேண்டிய வேண்டியாங்கு செய்தலால் செய்தவம், ஈண்டு முயலப்படும். இறைவனை நோக்கி முயன்று தவம் செய்தால், இடைவிடாது உழைத்தால் வேண்டியதை வேண்டியபடி பெறலாம் என்று வள்ளுவர் உறுதியளிக்கின்றார்.

**“மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்**
**நிலமிசை நீடுவாழ் வார்” குறள். எண். 3**

அன்புடன் நினைப்பவர் நெஞ்சத்தில் எழுந்தருளிய இறைவனை இம்மையிலும் நீடுவாழ்ந்து, மேலுலகிலும் நலம்பெற்று வாழ்வர். ‘மலர்மிசை ஏகினான்’ என்பது பரிமேலழகர் கருத்துப்படி அன்பால் நினைப்பவரது உள்ளத்தின் கண் அவர் நினைத்த வடிவோடு சேறலே ஆகும். நிலமிசை, மிசைநிலம் என்று மாற்றிப் பொருள் கண்டால் நிலமிசை என்பது இம்மை உலகில் என்றும், மிசைநிலம் என்பது மேலுலகில் எனவும் பொருள் தரும்.

**ஐம்புலக் கோட்பாடும் இறை நெறியும்**

இறைவன் எல்லாவற்றுள்ளும் நிறைந்து இருப்பவன். தனக்கு எதிலும் வேண்டுதல், வேண்டாமை, விருப்பு, வெறுப்பு இல்லாதவன். அவனுடைய திருவடியைச் சென்று அடைபவருக்கு என்றும் துன்பங்கள், துயர்கள் தோன்றவதில்லை.

**"வேண்டுதல் வேண்டாமை இலான்அடி சேர்ந்தார்க்கு**
**யாண்டும் இடும்பை இல"** **குறள். எண். 4**

ஐம்புலன்களுக்கு அப்பாற்பட்டவன். இறைவன் தன்னை வழிபடுவோரின் ஐந்து புலன்களின் வழியாகத் தோன்றும் ஆசைகளைக் கட்டுப்படுத்துபவன். அத்தூயவனது உண்மையான ஒழுக்க நெறியைப் பின்பற்றி நடந்திடுவார் நீண்ட புகழுடன் வாழ்வர். இறைவனின் இயல்புகளைப் பின்பற்றி அறவினை செய்வோரிடம், நற்பணி ஆற்றுபவர்களிடம் அறிவை மயங்கச் செய்யும், செருக்கை ஏற்படுத்தும் நல்வினையும் தீவினையும் சேராது.

**"இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்**
**பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு"** **குறள். எண். 5**

இறைவன் பொறிவாயில் ஐந்தவித்தான்; மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்புலன்களும் இல்லாதவன். ஒழுக்கமே கடவுள் தன்மையை வளர்ப்பது.

**"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப் படும்"** **குறள். எண். 131**

ஒழுக்கமே உயிர். பொய்தீர் ஒழுக்க நெறியே வள்ளுவர் போற்றும் உயர்வாழ்வு. ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை, இழுக்கத்தின் எய்துவர் எய்தாப் பழி. நல்லொழுக்கம் நல்லறமாகிய விளைச்சலுக்கு விதைக்கப் படும் விதை. தீய ஒழுக்கம் அப்பொழுது மட்டுமன்றி எப்பொழுதும் தீராத துன்பம் தரும். ஒழுக்க நெறி வாழ்தலே தெய்வ வாழ்வு; இன்ப வாழ்வு; இனிய வாழ்வு.

**அறக் கோட்பாடும் இறை நெறியும்**

வாழ்க்கை, அறத்தின் அடிப்படையில் அமைய வேண்டும். அறத்தோடு பொருந்தி நற்செயல்கள் செய்தால் நன்மைகளும் ஆக்கமும் வந்து சேரும். அறச்செயல் செய்ய மறந்துவிட்டால் தீமையும், கேடும் வந்து சேரும். 'அறன் வலியுறுத்தல்' அதிகாரத்தில் வள்ளுவர் அறத்தின் ஆற்றலையும், பெருமையையும் விரிவாகக் கூறுகின்றார். சிறப்பாகிய வீடுபேற்றையும், செல்வச்

செழிப்பையும் வழங்குவது அறநெறியாகும். இவ்வறத்தைக் காட்டிலும் மேன்மையானது எதுவும் இல்லை.

**"அறத்தின் ஊஉங்கு ஆக்கமும் இல்லை; அதனை**
**மறத்தலின் ஊங்குஇல்லை கேடு."** **குறள். எண். 32**

மனம் மாசற்றதாக இருந்தால்தான், – பொறாமை, நியாயம் இல்லாத பேராசை, தன்னையே அழிக்கும் கடுங்கோபம், கடுமையான இன்னாச்சொற்கள் ஆகியவை களிலிருந்து நீங்கியிருந்தால்தான் – உண்மையால் நிறைந்திருந்தால்தான் – இறைவன் நம் மனத்தகத்தே வீற்றிருப்பான்.

**"சிறப்புஈனும்; செல்வமும் ஈனும்; அறத்தின்ஊஉங்கு**
**ஆக்கம் எவனோ உயிர்க்கு"** **குறள். எண். 31**

**"அறத்தான் வருவதே இன்பம்;மற்று எல்லாம்**
**புறத்த புகழும் இல"** **குறள். எண். 39**

அறச்செயலால் வருவதே இன்பம். அறச்செயலே புகழ் தரும். அறத்திற்கு மாறானது இன்பம் தந்தாலும், துன்பம் ஆகும்; புகழையும் பெருமையையும் கெடுக்கும். அறக்கடவுள் நன்மை செய்பவருக்கு நன்மையையும், புகழையும், இன்பத்தையும் நல்குவார். தீமை செய்பவரை, அறவாழியாகிய படைக்கலம் அழிக்கும்; தீயோரை ஒடுக்கும்; ஒறுக்கும்.

**"என்பு இலதனை வெயில்போலக் காயுமே**
**அன்பு இலதனை அறம்"** **குறள். எண். 77**

**"மறந்தும் பிறன்கேடு சூழற்க; சூழின்**
**அறம்சூழும் சூழ்ந்தவன் கேடு"** **குறள். எண். 204**

அறக்கடவுளாகிய இறைவன் தீமையை அழித்து, நன்மையாகிய அறத்தைக் காப்பான். அறக் கடவுளாக விளங்கும் இறைவன் அடி போற்றி நடப்பவர், மற்றப் பொருளும், இன்பமுமாகிய கடல்களை இறைவன் துணைகொண்டு எளிதாகக் கடந்து செல்வர். மற்றவர் பிற துன்பக் கடலில் இருந்து மீளமுடியாது துன்புறுவர் என வள்ளுவர் வலியுத்துகிறார்.

**எண்குணத்தான் என்ற சொல்**

- **தன்வயத்தனாதல்**
- **தூய உடம்பினனாதல்**
- **இயற்கை உணர்வினனாதல்**
- **முற்றுமுணர்தல்**
- **இயல்பாகவே பாசங்களில் நீங்குதல்**
- **பேரருளுடைமை**
- **முடிவிலாற்றலுடைமை**
- **வரம்பிலின்பமுடைமை**

என இவை எட்டுக் குணங்களாம். 'எண்குணத்தான்' என்ற சொல்லுக்கு உரையாசிரியர்கள் பல்வேறு பொருள் கூறுகின்றார்கள். பரிமேலழகர், பரிதியார், மணக்குடவர் ஆகியோர் எட்டுக் குணங்களையுடையவன் என்று பொருள் கொள்கின்றனர். எட்டுக்குணங்களையும் ஏற்றுக்கொண்டு திரு.வி.க. அவர்கள் அடியாரால் எண்ணப்படும் குணங்களை உடையவன் என்ற சிறப்புப் பொருளும் கண்டார். 'எண்குணத்தான்' என்பதற்கு எளிமை வாய்ந்த குணமுடையான், அன்பருக்கு எளியன் என்ற பொருளும் உண்டு. எண் என்னும் அடி திருக்குறளில் எளிமை என்ற பொருளில் வழங்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| **"எண்பொருள வாகச் செலச் சொல்லி"** | **குறள். எண். 424** |
| **"எண்பதத்தால் எய்தல் எளிதுஎன்ப"** | **குறள். எண். 991** |
| **"எண்பதத்தான் ஓராமுறை செய்யா மன்னவன்"** | **குறள். எண். 548** |

இக்குறள்களில் 'எண்' என்ற சொல் எளிமை என்ற பொருளில் வழங்கப்பட்டுள்ளது. இறைவன் அடிகள், யான், எனது என்னும் செருக்கறுத்து அருளும். அவ்வடிகளை வணங்குவதே செருக்கு அறுக்க உதவும் குணமாகும். மனிதன் தலை உயிரின் அறிவையே குறிக்கும். தலையாகிய சிற்றறிவு, தாளாகிய வேதமுடன் பொருந்த வேண்டும். கற்றதனால் பெற்ற அறிவில் பயனில்லை என்பார் கா.அப்பாத்துரையார். இயக்கம் இல்லாத உடல், பேசாத வாய், நுகராத மூக்கு, காண இயலாத கண், கேளாத செவி ஆகியவற்றால் பயன் ஏதும் விளையாது. அதுபோல எண்ணரிய பண்புகளின் இருப்பிடமாகத் திகழும் இறைவனின் திருவடியை வணங்கி நடவாதவரின் தலைகளின் நிலையும் பயனற்றது ஆகும்.

**“கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்**
**தாளை வணங்காத் தலை”** **குறள். எண். 9**

மறுபிறப்பில் நம்பிக்கையுடையவர் திருவள்ளுவர். ஓருயிர் பல பிறப்பு எடுக்கும் என்று கருதுபவர். ‘எழுபிறப்பு’ என்றும் சுட்ட்யிருக்கின்றார். இறைவனுடைய திருவருளைப் பெற்றவர்கள், இறைவனுடைய திருவடிகளைப் பொருந்தி நினைக்கின்றவர்கள், பிறவியாகிய பெருங்கடலைக் கடக்க முடியும். மற்றவர் அப்பிறவிக் கடலைக் கடக்கமுடியாது என்கிறார்.

**“பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்**
**இறைவன்அடி சேரா தார்”** **குறள். எண். 10**

இறைவன் உண்டு என உணர்ந்து வாழ்தல் வேண்டும். துன்பங்கள் நீங்கி இன்புற்று வாழ, நிலமிசை புகழோடு நீடு வாழ, அச்சம், நீங்கி வாழ, இறைவனின் துணை வேண்டும். வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து, வாழ்வில் பயனடைய, பிறப்பு முதல் இறப்பு வரை தெய்வநிலை பெற இறைவன் திருவடிகளின் துணை வேண்டும். திருவள்ளுவர் வலியுறுத்தும் அடிப்படை நெறிகள், பொய்யாமை (வாய்மை), கொல்லாமை, உலகிற்கும் உரிய கடமைகள் செய்தல், பற்றற்று வாழ்தல், நற்கடமைகள் ஆற்றல், விலக்கியன ஒழித்தல், அன்பு, நாண், ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையுடைய சான்றோர்களாய், இயன்ற வகையெல்லாம் அறப்பணிகள் செய்து வாழ்தல், பிறர் உயிர்களைத் துன்பம் செய்யாது போற்றி வாழ்தல், அன்பும் அருளும் கொண்டு வாழ்தல், பழிக்கு அஞ்சி மானத்தோடு வாழ்தல், நிலையாமை உணர்ந்தல், இம்மையில் புகழோடு வாழ்ந்து, பிறவா நிலை பெற்று, என்றும் பேரின்பம், பேரானந்தம் கொண்டு வாழ்தலே திருவள்ளுவர் காட்டும் வாழ்வியல் நெறியாகும்.

**“ஒன்றாக நல்லது கொல்லாமை; மற்றுஅதன்**
**பின்சாரப் பொய்யாமை நன்று.”** **குறள். எண். 323**

முதல்நிலையில் சிறந்த நல்லறம் கொல்லாமையே. அதனை அடுத்த நல்லறம் பொய்யாமை போற்றி வாய்மையை மேற்கொள்ளுதல்.

**“கற்றுஈண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்**
**மற்றுஈண்டு வாரா நெறி.”** **குறள். எண். 356**

**“பிறப்புஎன்னும் பேதைமை நீங்கச் சிறப்புஎன்னும்**
**செம்பொருள் காண்பது அறிவு.”** **குறள். எண். 358**

**“இன்பம் இடையறாது ஈண்டும் அவாவென்னும்**

**துன்பத்துள் துன்பம் கெடின்.” குறள். எண். 369**

**“ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே**
**பேரா இயற்கை தரும்.” குறள். எண். 370**

இவ்வுலகில் உண்மை உணர்த்தும் நூல்களைக் கற்று மெய்ப்பொருளைக் கண்டவர்கள் பிறவா நெறிக்கு முயல்வர். மனத்தைச் செம்மைப்படுத்துவது செம்பொருள். செம்பொருள்தான் கடவுள். பிறப்பு என்னும் பேதைமை நீங்கச் சிறப்பு என்னும் இறைவன் திருவருளை நாட வேண்டும். ஆசை என்று சொல்லப்படுகின்ற துன்பத்தின் துன்பம் கெடின், இன்பம் இடையறாது வந்து சேரும். ஒருகாலும் நிறைவு பெறாத இயல்பினையுடைய ஆசையினை ஒருவன் நீக்கிவிடின், அவ்வாறு ஆசையை நீக்கிய நிலையே பிறவா நிலையைத் தரும். ஆசைகள் அற்ற நிலையிலே வீடுபேறு அடையலாம்.

**முடிவுரை**

மானுட இனத்தின் வாழ்க்கை எங்குத் தொடங்கம் எங்கு முடிவு என்பதை அறிதல் என்பது இயலாதது. எனினும் ஒன்றைப் பற்றிக்கொண்டு வாழ்தல் மரபெனக் கொண்டனர் சான்றோர். வாழும் நெறியறியாது இனம் தடுமாறிய போது இறைநெறிகள் வகுக்கப்பட்டது. ‘எல்லாக் இதன்பால் உள’ என உரைக்கும் நூல் தொல்காப்பியம். மதம், இனம்,மொழி நாடு எனக் கடந்து அனைவரும் ஏற்றும் வாழ்வில் பின்பற்றியும் வாழும் கருத்துக்களை வள்ளுவர் திருக்குறளில் வலியுறுத்திக் காட்டியுள்ளார். அதில் இறைக் கருத்தும் நம்பிக்கை சார்ந்த பண்பாடும் முதன்மையாக இருந்துள்ளதை வள்ளுவர் திருக்குறளில் தெளிவுடன் வரையறை செய்து காட்டியுள்ளார். இந்த ஆய்வு வள்ளுவர் பார்வையில் இறைநெறி எவ்வாறு பார்க்கப்பட்டுள்ளது என்பதை ஆய்ந்து மேற்கோள்களின் அடிப்படையில் தெளிவுபடுத்தி இருக்கிறது என்பதை அறிய முடிகிறது.

**துணைநூற்பட்டியல்**


1. புலியூர் கேசிகன், தொல்காப்பியம், தமிழ் வளர்ச்சித்துறை, சென்னை, 2014
2. திருக்குறள் பரிமேலழகர் உரை, கங்கை புத்தக நிலையம், 2005
3. முனைவர் குமரிச்செழியன், திருக்குறளில் அறிவியல் கருத்துகள், கௌரா பதிப்பகம், 2016
4. விருச்சிகன் ரவீந்திரநாத், தமிழ் ஒளியில் எண் கணிதம், ஸ்ரீ செண்பகா பதிப்பகம், 2010
5. இளங்குமரன் இரா., திருக்குறளில் அறிவியல், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 2009
6. திருக்குறள், சாரதா பதிப்பகம், சென்னை, 2004
7. பதினெண்கீழ்க்கணக்கு ஆய்வுக்கோவை, முதலாம் தொகுதி குறிஞ்சி பதிப்பகம், ஆம்பூர், 2013
8. பதினெண்கீழ்க்கணக்கு ஆய்வுக்கோவை, இரண்டாம் தொகுதி குறிஞ்சி பதிப்பகம், ஆம்பூர், 2013
9. பதினெண்கீழ்க்கணக்கு ஆய்வுக்கோவை, மூன்றாம் தொகுதி குறிஞ்சி பதிப்பகம், ஆம்பூர், 2013


**Referances**


1. Puliyur Keshikan, Tolkappiyam, Tamil Development Department, Chennai, 2014
2. Thirukkural Parimelazhagar's text, Gangai Bookstore, 2005
3. Dr. Kumarichezhiyan, Scientific Concepts in Thirukkural, Kaura Publishing House, 2016
4. Viruchikan Rabindranath, Numerology in Tamil Light, Sri Senpaka Publishing House, 2010
5. Ilangumaran I.R., Science in Thirukkural, Meenakshi Bookstore, Madurai, 2009
6. Thirukkural, Saradha Publishing House, Chennai, 2004
7. Pathinenkeezhkkanakku aaivukkovai, Part I, Kurinji Publishing House, Ambur, 2013
8. Pathinenkeezhkkanakku aaivukkovai, Part II, Kurinji Publishing House, Ambur, 2013
9. Pathinenkeezhkkanakku aaivukkovai, Part III, Kurinji Publishing House, Ambur, 2013